Alcohol and Drug Information Centre

ADIC

No.40/18, Park Road, Colombo 05, Sri Lanka.
Tel: +94 11 2584416,+94 11 2592515, Fax: +94 112508484
Email: info@adicsrilanka.org
Web site: http//www.adicsrilanka.org

30.06.2020

சிநேகபூர்வமான வேட்பாளர் அவர்களே,

**2020 பொதுத் தேர்தல் - புகைப்பொருள், மதுசாரம் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நாட்டின் துரித அபிவிருத்தியை நோக்கிய வேலைத்திட்டம்**

மதுசாரம் மற்றும் புகைப்பொருள் பாவனையால் வருடாந்தம் 35000 பேர் மரணத்தைத் தழுவுகின்றனர். மேலும் ஹெரோயின் போன்ற ஏனைய போதைப்பொருள் வகைகளினால் பெருமளவிலானோர் உள நோய்களிற்கு ஆளாகுகின்றனர். இலங்கையில் நாளொன்றிற்கு ரூபா 38 கோடி சிகரட்டிற்காக செலவிடப்படுகின்றது. சாராயம், பியர் பாவனைகளிற்காக தினமும் ரூபா 59 கோடி எமது மக்களால் செலவிடப்படுகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலைமையில், புகைப்பொருள், மதுசாரம் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நாட்டின் துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு மக்களின் பிரதிநிதியாக இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடும் தங்களால் எவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என்பதை காண்பிப்பதே எமது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த பிரச்சினை தொடர்பில் தெளிவை பெற்றுக்கொள்வதற்கு எமது நிறுவனத்தினால் தொகுக்கப்பட்ட தரவுத்தொகுப்பு இதனூடு இணைக்கப்பட்டுள்ளது.

கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிந்துரைகளிற்கு தங்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதே எம்மால் வடிவமைக்கப்பட்ட இச்செயற்றிட்டத்தின் எதிர்ப்பார்ப்பாகும்,

01. தனி சிகரட் மற்றும் புகைப்பொருட்களின் விற்பனையைத் தடை செய்தல்.
02. வெற்றுப்பொதியிடல் முறைமையை அங்கீகரிக்கப்படல்.
03. கல்வி நிறுவனங்களிலிருந்து 100 மீற்றர்களுக்கு இடைப்பட்ட தூரத்தில் புகைப்பொருட்களின் விற்பனையைத் தடை செய்தல்.
04. புகையிலை நிறுவனத்திடமிருந்து முறையான வரி அறவீட்டு முறைமையை வகுத்துக்கொள்ளல்.
05. மதுசாரம் மற்றும் புகையிலை மீதான அதிகார சபை சட்டத்திற்கு துறை சார்ந்த நிபுணர்களால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்தல்.
06. 2016ம் ஆண்டு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட மதுசாரம் தொடர்பான கட்டுப்பாட்டுக்கொள்கையை நடைமுறைப்படுத்தல்.
07. இலங்கையில் கஞ்சா சட்டரீதியாக்க இடமளிக்காமல் இருத்தல்.
08. ஹெரோயின் உட்பட ஏனைய அனைத்து போதைப்பொருட்கள் தொடர்பிலும் தற்போது காணப்படும் சட்டங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்துதல்.

இணைக்கப்பட்டுள்ள தரவுத் தொகுப்பில், மதுசாரம், புகைப்பொருள் உட்பட ஏனைய போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் சாட்சியங்களின் ஊடாக தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்திற்கு தங்களின் ஆதரவு தொடர்பில் தெரிந்து கொள்வதற்காக, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உறுதி மொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டு எமது நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வருபவரிடம் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இச்செயற்றிட்டம் தொடர்பில் மேலதிக தகவல்களையும், ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு தயாராகவுள்யோம். மேலதிக தகவல்களுக்கு நிதர்ஷனா செல்லதுரை : 071 1921300 அல்லது அப்துல் றஹீம் 071 4352849 எனும் இலக்களை தொடர்பு கொள்ளவும்

நன்றி,

புபுது சுமனசேகர

நிறைவேற்றுப் பணிப்பாளர்